## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 173 / 2018**

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விழுப்புரம் அரசு போக்குவரத்து கழகத்தில் பரிசோதகர்.(ஓய்வு) |
| தந்தை பெயர் | : சஞ்சிவி | | |
| கிராமம் | : நெய்வாநத்தம் | | |
| வட்டம் | : கீழ்ப்பென்னாத்தூர் | சமயம் | : |
| | | சாதி | : |
| | | வயது | : 60 |

தேதி 02.09.2022:

சாட்சியையும் எதிரிகளையும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2393 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**அ.சா. 1 கிருஷ்ணமூர்த்தி : முதல் விசாரணை**

1. நான் தற்போது விழுப்புரம் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பரிசோதகராக பணி புரிந்து கடந்த 31.05.2022 ம் தேதியன்று ஓய்வுபெற்றேன். தற்போது நான் விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 உலகநாதன் என் மகன். பட்டியல் சாட்சி 3 இந்துமதி என் மனைவி. ஆஜர் எதிரிகள் என் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள்.

2. உளியம்பட்டு கிராமத்தில் ஆஜர் எதிரிகளிடம் இருந்து 80 செண்ட் இடத்தை 1993 ல் கிரையம் வாங்கினேன். மேற்படி நிலத்தில் வீடு கட்டி குடியிருக்கிறேன். மேற்படி வீடு கட்டி கொண்டியிருந்த சமயத்தில் 06.06.216 ம் தேதியன்று காலை 7.00 மணி அளவில் வீடு கட்டிட வேலைக்கு மேஸ்திரி வருவார்கள் என்றும் அதற்கு தண்ணீர் பிடித்து வைக்குமாறு என் மகன் உலகநாதனை அனுப்பி வைத்தேன். அதன்படி என் மகன் மேற்படி வீடு கட்டும் இடத்திற்கு சென்றியிருந்தபோது என் மகனுக்கு தலையில் அடிப்பட்டு இரத்தம் கொட்டியது. என் மனைவி தடாகம் கூட்ரோட்டில் உள்ள பால் ஸ்டோரில் பால் ஊற்றிவிட்டு நெய்வா நத்தம் ஊரில் உள்ள வீட்டிற்கு வந்துகொண்டியிருந்தபோது என் மகன் அளறல் சத்தம் கேட்டு உளியம் பட்டு கிராமத்தில் உள்ள நிலத்திற்கு என் மனைவி சென்றார். பிறகு அடிப்பட்ட என் மகன் இருச்சக்கர வாகனத்தை அவனே ஓட்டிக்கொண்டு என் மனைவியும் அமர வைத்து நெய்வா நத்தம் என் ஊரில் உள்ள என்

விட்டிற்கு வந்தார்கள். அப்போது என்னிடம் நிலத்தில் பிரச்சனை என்றும், உலகநாதனை பிடித்து குமரன், அம்சவள்ளி, கிருஷ்ணமூர்த்தி, பூபாலன், மற்றொரு நபரும் சேர்ந்து அடித்துவிட்டதாக சொன்னார்கள். பி றகு நாகலாம் பட்டு வை சேர்ந்த மணிவண்ணன், ராஜேஷ் ஆகியோர்களை வரவைத்து அடிப்பட்ட காயத்தோடு ந.பி பெற்றாள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். காவல் நிலையத்தார்கள் தலையில் அதிக அளவில் காயம் இருந்ததால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றோம்.

4. பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு என் மகனுடன் நான் செல்லவில்லை. நான் துணிமணி எடுத்து செல்ல வீட்டிற்கு வந்துவிட்டேன். அவ்வாறு துணி, பணம் எடுத்து கொண்டு பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு செல்ல தடாகம் கூட்ரோடு வந்தபோது ந.பி பெற்றாள் போலிசார் அங்கு இருந்தார்கள். அப்போது என் மகனை அடித்தது சம்மந்தமாக போலிசாரிடம் கேட்டதற்கு காவல் நிலையத்திற்கு வந்து விவரம் சொல்லுமாறு கூப்பிட்டார்கள். அதன் பேரில் போலிசாரின் பைக்கில் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். நடந்ததை புகாராக எழுதிக்கொடுக்க சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவர் என்னை வற்புறுத்தினார். நான் சம்பவத்தின் போது வீட்டில் இருந்ததாகவும், மகன் மருத்துவமனையில் இருப்பதால் மகனை கேட்டு விசாரித்த பிறகுதான் விவரம் தெரியும் என்று சொன்னேன். பிறகு மகனிடம் போனில் பேசி தகவல்பெற்று காவல்நிலையத்தில் புகாரும் கொடுத்தேன்.

5. அப்போது எனக்கு எதிராக புகார் வந்திருப்பதாக கூறி என்னை சிறைக்கு அனுப்பபோவதாக போலிசார் என்னிடம் சொன்னார். சம்பவத்தின் நான் இல்லை என்று சொல்லியும் என்னை சிறையில் அடைத்துவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுான். அதில் உள்ள சங்கதியும் எனக்கு தெரியும். **(06.06.2016 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி :எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

6. என்ன படித்திருக்கிறேன் என்றால் நான் 12 ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் முதலியார் சமூகமா என்றால் சரிதான். எங்கள் ஊரில் முதலியார் சமூகத்தினர் அதிகமாக உள்ளனர் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் வண்ணார் சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளும் நான் வசிக்கும் ஊர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வண்ணார் சமூகத்தினர்கள் மிகவும் குறைவு என்றால் சரிதான். எல்லா சமூகத்தினருடனும்

சகஜமாக பழகுவோமா என்றால் பழகுவோம். அடிப்பட்ட வீட்டிற்கு வந்த என் மகனை எல்லோரும் பார்த்தார்களா என்றால் நான் வீட்டில் இருந்தேன். என்னிடம் சொன்னபோது நான் பார்த்தேன். அவ்வாறு நான் அடிப்பட்ட என் மகனை நான் பார்த்து விசாரித்தபோது மற்றவர்கள் யாரேனும் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்க உதவிக்கு வந்தார்களா என்றால் வரவில்லை. அவர்கள் பெண்கள். நான் கூறுவது போல் என் மகன் அடிப்பட்டு வந்திருந்தால் ஊரில் உள்ளவர்கள் வந்து உதவி செய்திருப்பார்கள் என்றால் அடிப்பட்டது வந்தது உண்மை.

7. அடிப்பட்ட என் மகனை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சேர்த்து முதல் உதவி சிகிச்சை எடுத்த பிறகு பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த நிலையில் அடிப்பட்டது முதல் பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது வரை எவ்வளவு நேரம் என் மகனுடன் நான் இருந்தேன் என்றால் சுமார் 2 மணி நேரம் இருந்தேன். மேற்படி 2 மணி நேரத்தில் என் மகன் பேசக்கூடிய சூழ்நிலையில் இருந்தரா என்றால் சுய நினைவு இல்லாமல் இருந்தார் அவரால் பேச இயலவில்லை. நிலத்தில் அடிப்பட்டு வீட்டிற்கு தாமாக வண்டி ஓட்டி வந்தபோது என் மகன் சுய நினைவோடு இருந்தரா என்றால் சுய நினைவோடு தான் இருந்து வண்டியை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். அவ்வாறு சுய நினைவோடு இருந்தபோது என் மகனிடம் எப்படி அடிப்பட்டது என்பதை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் சேர்ப்பதற்குதான் பார்த்தேன். அ.சா.ஆ. 1 புகாரை எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன்.

8. போலிசார் கட்டாய படுத்தியதன் பேரில் அ.சா.ஆ 1 புகாரை எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆமாம். அ.சா.ஆ. 1 புகாரை எழுதும்போது என் மகனை விசாரிக்கவில்லையா என்றால் என் மகனிடம் விவரம் கேட்டுதான் புகார் கொடுத்தேன். அவ்வாறு நான் விசாரித்தபோது என் மகன் சுய நினைவோடு இருந்தாரா என்றால் இருந்தார். நான் கொடுத்த அ.சா.ஆ 1 புகாரில் சம்பவ நடந்த தேதி, நேரம் குறிப்பிடப்பட்டுயிருக்கிறதா என்றால் தேதி குறிப்பிடப்பட்டியிருக்கிறது. நேரம் குறிபிடபடவில்லை.

9. நான் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே போலிசார்கள் மருத்துவமனைக்கு சென்று அடிப்பட்டு இருந்த ஆஜர் எதிரிகளிடம் புகார் வாக்குமூலம் வாங்கிவிட்டார்கள் என்றும் அந்த விவரத்தை போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் எனக்கு எதிராக புகார் இருப்பதாகதான் போலிசார் சொன்னார்.

10 என் மகனும், மனைவியும் அடிப்பட்டு இருந்த நிலையில் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்வதற்கு முன்பாக நான் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேனா என்றால் இல்லை. அசா.ஆ- 1 புகாரில்

நிலத்தில் உள்ள இடத்தில் வீடு கட்டியிருப்பதாக சொல்லாமல் வீடு கட்டியுள்ளோம் என்று எழுதப்பட்டியிருக்கிறது என்றால் வீடு கட்டிக்கொண்டியிருக்கும்போதுதான் சம்பவம் நடந்தது . பதட்டத்தில் வீடு கட்டியுள்ளோம் என்று எழுதியிருக்கிறேன்.

**11.** 06.06.2016 காலை 6.30 மணிக்கு நானும், என் குடும்பத்தினரும் , ஆஜர்எதிரிகள் அவர்களது நிலத்தில் வேலை செய்துகொண்டியிருந்போது அவர்களை தாக்கி இரத்தக்காயத்தை உண்டு பண்னிவிட்டு அச்சமயத்தில் ஏற்பட்ட காயத்தை கொண்டு நாங்கள் செய்த குற்றத்தில் இருந்து தப்பிப்தற்காக திட்டமிட்டு நேரடியாக காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் ஆஜர் எதிரிகளை தாக்கவில்லை. 06.06.2016 ம் தேதி நா-னும் என் குடும்பதாரும் ஆஜர்எதிரிகளை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக எனக்கு எதிராக வழக்கு போட்டு இருக்கிறார்கள் என்றால் வழக்கு உள்ளது. அது பொய் வழக்கு. அந்த வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் உள்ளது.

**12.** இந்த பிரச்சணைக்கு முன்பாக வேறு எந்த பிரச்சணையும் இல்லை என்றால் 1993 ல் எதிரிகளிடம் இருந்து நான் கிரையம் வாங்கியது முதல் பிரச்சணை இருந்து வந்தது. ஆஜர் எதிரிகளிடம் நான்தான் பிரச்சணை செய்தேன் என்றால் சரியல்ல. மீண்டும் மீண்டும் நான் பிரச்சணை செய்து ஆஜர் எதிரிகளை தாக்கியதால் என்னை சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றால் நான் பிரச்சணை செய்யவில்லை.

**13.** நான் கிரையம் வாங்கியதில் நிலம் குறைவாக இருந்ததற்கு 6 ஆயரம் ரூபாய் எதிரிகளிடம் இருந்து நான் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. இல்லாத நிலத்தை இருப்பதாக நிலம் கிரையம் கொடுத்தாக காவல்நிலையத்திலோ அல்லது உரிமையியல் நீதிமன்றத்திலோ புகார் கொடுத்தோமா என்றால் இடம் குறைவாக இருப்பது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனக்கு கிரையம் கொடுத்தவர் யார் என்றால் ஆஜர் எ திரிகளான குமரனும், அவரது மனைவியும். எவ்வளவு இடம் என்றால் 80 சென்ட்.

**14.** ஆஜர் எதிரிகளுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 100 சென்ட் இருந்ததில 80 சென்ட் கிரையம் கொடுத்தார்கள். மீதம் 20 சென்ட் எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாக ரோடுக்காக எடுத்துவிட்டார்கள். இடம் குறைவாக இருப்பதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு உண்டான ஆவணத்தை கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மனைவி பெயரிலும், கணவர் குமரன் பெயரிலும் ஒரே பத்திரமாக இருந்தது. என்னிடம் கொடுத்த ஒரு மூல பத்திரத்தில் 74 சென்ட்துதான் இருந்தது. 74 சென்ட் இடம் உள்ள நிலையில் 80 சென்ட் கிரையம் பெற்றேனா என்றால் 74 சென்ட் அம்சவள்ளி பெயரில் இருந்த சொத்தையும் குமரன் பெயரில் இருந்த நிலத்தில் மீதி இடத்தையும் ஒதுக்கிவிட்டு கிரையம் கொடுத்தார்கள்.

**15.** குமரன் பெயரில் இருந்த கிரையம் பத்திரத்தை என்னிடம் கொடுத்தரா என்றால் இல்லை. 80 சென்ட் நிலத்தை மோசடியாக கிரையம் வாங்கி கொண்டு அவரிடம் பிரச்சணை செய்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வபோது நான் என் பிள்ளைகள் எல்லோரும் ஆஜர் எதிரிகளிடம் பிரச்சணை செய்து வருகிறோம் எ ன்றால் சரியல்ல.

**16.** ஆஜர் எதிரிகள் நிலத்தில் எனது மாடு மேய்ந்ததாகவும் அதை ஆஜர் எதிரிகள் பிடித்து கட்டி வைத்ததாகவும் பிறகு அந்த மாட்டை பொதுவான நபரிடம் கொடுத்து என்னிடம் கொடுக்க சொன்னதாகவும் ஆஜர் எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் கன்றுகுட்டிதான் மேய்ந்ததாகவும் கட்டிவைத்தாகவும் சொன்னார்கள். அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆஜர் எதிரிகள் நிலத்தில் எனது கன்று குட்டி மேய்ந்தது சம்மந்தமாக என்னிடம் ஆஜர் எதிரிகள் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. போலிசார் முதலில் புகார் கொடுத்தபோது விசாரித்த பிறகு பின்னிட்டு விசாரித்தார்களா என்றால் இல்லை. புகார் கொடுத்தபோதுதான் விசாரித்தார்கள். எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்து வழக்கு போட்டால் பயந்துவிடுவார்கள் என்று நான் புகார் கொடுத்தேன் என்றால் உண்மையைதான் நான் புகாராக கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை** :

இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.